**அக்டோபர்: 13**

**3 ம் வார்த்தை - உலகத்தில் பிதா தந்த பொறுப்பை நிறைவேற்று.**

**வாசிக்க: யோவான் 19: 18-27**

அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள், அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டுபக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.





அன்பு செல்லங்களா, நமக்கு காய்ச்சல் வந்தால், இல்ல அடிபட்டுவிட்டால், யாராவது நம்மை அவமானப்படுத்தி பேசிவிட்டால், நாம என்ன செய்வோம், எப்படி இருப்போம் என்று நமக்கு எல்லாருக்கும் தெரியும். வலியில் இருக்கும் போது, வேதனையில் தவிக்கும்போது யாராவது வந்து நல்லதா நாலு வார்த்தை பேசி, நம்மை இதயத்தை குளிர்விக்கணும் என்று தான் எதிர்பார்ப்போம் அல்லவா..? ஆனால் இங்கே நம் ஆண்டவரை பாருங்களேன், எல்லோராலும் கைவிடப்பட்டு, அவமானபட்டு, கை கால்களில் ஆணிகளால் கடாவப்பட்டு, சொந்தஜனம் இகழும் போதும், அன்பு சீடர்களில் அநேகர் அவரைவிட்டு ஓடிப்போன போதும், உடலெல்லாம் காயங்களால் உண்டான வலியெடுக்கும் போதும், இயேசப்பாவின் உள்ளம் அவரை சார்ந்து உள்ளவர்களுக்காக பரிதவித்தது. சிலுவையண்டையில் அழுது கொண்டு நிற்கும் தம் சீஷனையும் தாயையும் பார்த்து அவருக்காக என்ன செய்தீர்கள் என கேட்காமல், அவர்களுக்கு செய்யவேண்டிய கடமையை செய்து முடித்தார். அவருடைய பிள்ளைகளாகிய நாமும் தேவன் நமக்கு கொடுத்த அப்பா அம்மா, நண்பர்கள், சபையினரை மரியாதை கொடுத்து நடந்து கொள்ள வேண்டும். நம்ம வேலைகளை சொல்லி மறந்து விடக்கூடாது. இயேசப்பாவே செய்தால் நாம் எப்படி இருக்கணும். யோசிச்சு பார்த்து ஒப்புதருவீங்களா..?

தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? 1 யோவான் 4:20

## ஜெபம்

மஹா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, நீங்க எனக்கு இந்த உலகத்தில் கொடுத்த ஒவ்வொரு உறவுகளுக்காகவும் ஸ்தோத்திரம். அந்த உறவை மதிக்க கற்றுதாரும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

